**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
**ஓ.எஸ்.42/2020**
**2025 – ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 – ம் நாள் வெள்ளிக் கிழமை**
**வாதி – பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869 ம் ஆண்டு சட்ட எண். 44 வது பிரிவு 6 (1) ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **கோட்டைமுத்து** | **சாதி** | : | |
| **த/பெ** | : | | **சமயம்** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | **வயது** | : | |

**பி.வா.சா. 1 ஆஜர்.**
**இடைநிலை மனு எண் 4/2025 அனுமதிக்கப்பட்டு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**
**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பில் 1 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 27.10.1958 ம் தேதியிட்ட துரைச்சாமிதேவர் மகன் கோட்டைசாமி தேவர் கெவுரித்தேவர் மகன் முத்துராஜா தேவருக்கு புலஎண் 282/6 வண்டல் புஞ்சை என்ற நிலமான 2 ஏக்கர் 75 செண்ட் பரப்பை கிரையம் செய்து கொடுப்பதற்கான கிரயப்பத்திரம் பி.வா.சா.ஆ 1

2. 21.05.1962 ம் தேதியிட்ட ஆவண எண் 957/1962 என்ற எண்ணில் முத்துராஜாதேவர் சேக்இஸ்மாயில் மனைவி சுல்தான் பீவிக்கு 5 செண்ட் கிரயம் கொடுத்ததற்கான கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 2

3. 08.07.1974 ம் தேதியிட்ட சுல்தான் பீவி சாந்தாமணி என்பவருக்கு ஆவண எண் 1040/1974 என்ற எண்ணில் கிரயம் செய்து கொடுத்ததற்கான கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 3

4. வீட்டுவரி ரசீதுகள் தொடர் – 3 அசல் பி.வா.சா.ஆ 4

5. மின் கட்டண ரசீதுகள் தொடர் 2 அசல் பி.வா.சா.ஆ 5 ( பி.வா.சா.ஆ 4 மற்றும் பி.வா.சா.ஆ 5 ஆவணங்கள் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது )

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது )**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**